7th July 1962]

திரு. மு. கருணாநிதி: 'கோக்கிங்', 'ப்ரிக்கட்டிங்', கனிப்பொருள் பக்குவப் படுத்துவதும் இம்மூன்று சோதனைகளும் வெற்றி பெற்ற பிறகு நாலாவதாக கிழக்கு ஜெர்மனியில், இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டதாக ஆளும் கட்சி சார்புடைய பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. அதை கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தந்திருக்கிறேன், அதைப்பற்றித்தான் கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: எனக்குத் தெரிந்த வரையிலே ஆளும் கட்சிக்குப் பத்திரிகை கிடையாது. அறை குறையாகக் கிடைக்கிற செய்திகளை வைத்துக்கொண்டு செய்திகளைப் பிரசுரம் செய்தால் இன்னும் கூடுதல் பிரதிகள் விற்குமே என்று பல செய்திகள் வெளியிடப்படுகின்றன. நமது ராஜ்யத்தின் பிரதிநிதி ஸி.வி.எஸ். மணி அவர்கள் இப்பொழுது கிழக்கு ஜெர்மனிக்கு போய் இருக்கிறார்கள். அவர்கள் எழுதிய கடைசிக் கடிதத்தில் பரிசீலனை இன்னும் நீடித்து நடக்கும், ஒன்றிரண்டு வாரங்கள் ஆகும் என்றுதான் எழுதியிருக்கிறார்கள்.

திரு. கோ. வெங்கடராமன்: தட்டினால் தங்கம்; வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்று பேசுகின்ற நிபுணர்கள் ஏதாவது ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அந்த நிபுணர்களின் முடிவு சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: ஆராய்ச்சி செய்கிறவர்கள் அம்மாதிரிப் பேசமாட்டார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: வடக்கேயிருந்து நல்ல காற்று வீசுவதாக நான் அறிகிறேன். நல்ல காற்று இருக்கிற சமயத்தில் நமது கனம் அமைச்சர் அவர்கள் இந்த இரும்புக் கனியை உபயோகப்படுத்தும் வகையில் தூற்றிக்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். (ஆரவாரம்.)

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: நாங்கள் காற்றைக் கூட உண்டாக்க முடியும். (மேலும் ஆரவாரம்.)

பொறியியல் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளும்

* 186-அ. கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பொறியியல் கல்லூரி நிறுவுவதற்கான திட்டமுண்டா? எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir. In 1963–64.

திரு. கே. ஏ. மதியழகன்: ரீஜினல் என்ஜினியரிங் கல்லூரி சம்பந்தமாக மக்கள் சபையில் 20 நாட்களுக்கு முன்பு "திருச்சியில் ரீஜனல் என்ஜினியரிங் கல்லூரி அமைப்பது சம்பந்தமாகச் சென்னை சர்க்காரை என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி முழு விவரங்கள் கேட்டிருக்கிறோம். அது வந்து சேராததினால்தான் என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப்படவில்லை"

என்று கூறினர்களே, அத் தாமதத்திற்கு என்ன காரணம்? சேலத்தில் நம் சார்பில் என்ஜினியரிங் கல்லூரியை அமைப்பதில் உள்ள தடங்கல் என்ன, எப்பொழுது அது அமைக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கடராமன் : என்ஜினியரிங் கல்லூரி வைக்க வொர்க்ஷாப் போன்ற வசதிகள் உள்ள கட்டிடம் எல்லாம் தேவை. திருச்சியில் அதற்குத் தகுதியான இடம் தேடி, சற்றேறக்குறைய 800 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் சேலத்திலும் கட்டிடம் கட்டித்தான் கல்லூரி ஆரம்பிக்கப்படவேண்டும்.

MR. SPEAKER : As Questions 186-B, 186-C, 186-D and 186-E, relate to polytechnics and Engineering Colleges, they may be taken up together.

* 186-B *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the six more polytechnics provided for in the Third Plan would be opened in 1962; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The question of starting one or two polytechnics during 1962–63 is under consideration of the Government.

* 186-C *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to open a new Engineering College; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Besides the Regional Engineering College at Tiruchirappalli, it is proposed to open two more Engineering Colleges during the Third Five-Year Plan period, one at Salem in the public sector and the other at Tirunelveli in the private sector.

* *186-D* **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு எத்தனை புதிய பொறியியற் கல்லூரிகள் **(Engineering Colleges)** பாலிடெக்னிக்குகள் **(Polytechnics)** திறப்பதற்குத் திட்டமிருக்கிறது?

(இ) அவைகளில் (1) அரசாங்கம், (2) தனியார் தரப்பில் எத்தனை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Nil; 2 (Two).

(*b*) Government, 1; private, 1.